## குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | **:-** | **SC.193/2018** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | **:-** | **அ.சா- 10 (PW-10 )** |
| **பெயர்** | **:-** | **சுந்தர்ராஜன்** |
| **தேதி** | **:-** | **18-08-2026** |

**மனு அனுமதிக்கப்பட்டு சான்றாளர் மீண்டும் அழைக்கப்பட்டார். சான்றாளருக்கு சத்தியப் பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை**

நான்தான் இந்த வழக்கிற்கான முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். புகார் கொடுத்தவர் இறந்துபோனவர்களின் உறவினர் இல்லை என்றால் சரிதான். நான் புகார் கொடுத்து உடனே முதல் தகவல் அறிக்கை -யை பதிவுசெய்துவிட்டேன். காவல் நிலையத்தில் பணி நேரம் என்ன என்றால் 24 மணி நேரமும் பணி நேரம்தான். புலனாய்வு அதிகாரியிடம் சொன்ன வாக்குமூலத்தில் 06.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. நான் சென்று பார்க்கும்போது சடலம் எப்படி கிடந்தது என்றால் நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை. இறந்துபோனவர் குடிபோதையில் அவரே தற்கொலை செய்துகொண்டார் என்றால் சரியல்ல. நான் தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi, B.L.,
Additional District&Session Judge,
Salem.